பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 04 2024 **MONDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நவீன தொழில்நுட்பம் வரி கணக்கீட்டை மேம்படுத்தி, வரி ஏய்ப்பை தடுக்க உதவுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

2. திராவிடத்தின் பெயரால் தமிழர்களின் பண்பாட்டை எதிர்க்கட்சிகள் அழிக்க முயற்சிப்பதாக, பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

3. தேர்தல் பத்திரங்கள் திட்டம் மூலமாக பிஜேபி ஊழலில் ஈடுபட்டது தெரியவந்திருப்பதாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

4. இந்த ஆண்டு பருவமழை வழக்கத்தைவிட அதிகமாக இருக்கும் என்று புவி அறிவியல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணிக்கு எதிராக பெங்களூரு அணி பந்துவீச தீர்மானித்துள்ளது.

*-- இனி விரிவான செய்திகள் --*

**<<<<>>>>>**

நவீன தொழில்நுட்பம் வரி கணக்கீட்டை மேம்படுத்தி, வரி ஏய்ப்பை தடுக்க உதவுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

நாக்பூரில் இன்று நடைபெற்ற இந்திய வருவாய்த்துறை அதிகாரிகள் பயிற்சிக்கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு வரி செலுத்துவோரின் நம்பிக்கையை பெற உதவுவதாக கூறினார்.

டிஜிட்டல் செயல்பாடு வரி கணக்கீட்டை எளிமையாக்கி இருப்பதாகவும், வெளிப்படைத்தன்மையை உருவாக்கி இருப்பதாகவும் திரு ஜெக்தீப் தங்கர் குறிப்பிட்டார்.

<<<<>>>>>

மக்களவைத் தேர்தலில் முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தமிழகம் உட்பட நாடு முழுவதும் 102 தொகுதிகளில் பிரச்சாரம் நிறைவடைய இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில் அரசியல் தலைவர்கள் இறுதி கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி இன்று மாலை பங்கேற்று பேசினார்.

திராவிடத்தின் பெயரால் தமிழர்களின் பண்பாட்டை எதிர்க்கட்சிகள் அழிக்க முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

திமுக - காங்கிரஸ் கூட்டணியின் சித்தாந்தம் வெறுப்பினாலும், எதிர்ப்பினாலும் உருவாக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

தூய்மையான அரசியலே பிஜேபி-யின் லட்சியம் என்று தெரிவித்த அவர், பிஜேபி-யை தமிழக மக்கள் நேசிக்க தொடங்கிவிட்டதாக கூறினார்.

கச்சத்தீவு விகாரத்தில் காங்கிரஸ், திமுக கட்சிகள் செய்த தேச துரோகத்தை சமீபத்தில் பிஜேபி அம்பலப்படுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

மீனவர்கள் மற்றும் விவசாயிகள் முன்னேற்றத்திற்கான பல்வேறு திட்டங்கள் பிஜேபி தேர்தல் அறிக்கையில் உள்ளதாகவும், தமிழகத்தில் புல்லட் ரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

தேர்தல் பத்திரங்கள் திட்டம் மூலமாக பிஜேபி சட்டப்பூர்வமான ஊழலில் ஈடுபட்டது தெரியவந்திருப்பதாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற திமுக – காங்கிரஸ் கூட்டணி பிரச்சாரக்கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், தேர்தல் பத்திரங்களில் 56 சதவீதம் பிஜேபி-க்கு சென்றுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், பிஜேபி அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும், இரண்டு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு, விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பு போன்ற வாக்குறுதிகள் என்னவானது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

பழங்குடியின மக்களை பாதுகாக்கும் வகையில், பிஜேபி செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா கூறியுள்ளார்.

திரிபுரா மாநிலம் **''Kumarghaat ''** பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசினார்.

பழங்குடியின மக்களின் வளர்ச்சிக்காக பல்வேறு நலத்திட்டங்களை பிஜேபி அரசு செயல்படுத்தியதாக திரு அமித் ஷா குறிப்பிட்டார்.

வடகிழக்கு மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்கான ஆதரவு பெருகியிருப்பதாக அக்கட்சியின் மூத்த தலைவர் திரு ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களை சந்தித்த அவர், அம்மாநிலங்களில் உள்ள பன்முகத்தன்மையை பாதுகாப்பது அவசியம் என்று கூறினார்.

மேற்குவங்க மாநிலத்தின் **Coochbehar** மக்களவைத் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், அம்மாநில முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, மக்களை பிஜேபி தவறாக வழிநடத்துவதாக தெரிவித்தார்.

சாதாரண மக்களின் நலன்களை காக்கும் வகையில், பல்வேறு திட்டங்களை திரிணாமுல் காங்கிரஸ் அரசு செயல்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

டார்ஜிலிங்கில் நடைபெற்ற பிஜேபி கூட்டத்தில் பங்கேற்று பேசிய அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அனுராக் தாக்கூர், மத்திய அரசின் திட்டங்கள் மேற்குவங்கத்தில் செயல்படுத்தப்படவில்லை என்று திரிணாமுல் காங்கிரஸ் குற்றம் சாட்டுவது தவறானது என்று கூறினார்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சி ஊழலில் ஈடுபட்டு வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>>

மதுபான கொள்கை முறைகேடு வழக்கிலிருந்து தம்மை விடுவிக்கக் கோரி, தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனுவிற்கு பதிலளிக்குமாறு அமலாக்கத்துறைக்கு நோட்டீஸ் அனுப்ப உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணையை வரும் 29ஆம் தேதிக்கு ஒத்தி வைத்த நீதிபதிகள் திரு. **Sanjiv Khanna,** திரு. **Dipankar Datta** ஆகியோரைக் கொண்ட அமர்வு, திரு. கெஜ்ரிவாலுக்கு இடைக்கால விடுதலை வழங்குவது குறித்து பரிசீலிக்க முடியாது என்று உத்தரவிட்டது.

<<<<>>>>>

சுற்றுச்சூழலுக்கு உகந்த நடவடிக்கைகள் உள்ளிட்ட வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் துறை ஒப்புதல் தொடர்பான தேசிய பயிலரங்கம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சார்பில் நடைபெற்ற இந்த பயிலரங்கில், நெடுஞ்சாலைகளில் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவது, திட்டங்களுக்கான ஒப்புதல் பெறுவது போன்ற விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

<<<<>>>>>

நாடு முழுவதும் முதல் முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்திலும் இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று நடைபெற்ற முதல் முறை வாக்காளர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவிகள், அனைவரும் வாக்களிக்க வேண்டியது அவசியம் என்று தெரிவித்தனர்.

*(வாய்ஸ் பைட் - மாணவிகள் - 45 செகண்ட்ஸ்)*

<<<<>>>>

பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியா — பிரான்ஸ் கூட்டு பணிக்குழு கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

இணையம் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை பயங்கரவாத இயக்கங்கள் தவறாக பயன்படுத்துவது, நிதி திரட்டுவது உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்வது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

போதைப்பொருள் பரவலை தடுப்பது, பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்வது உள்ளிட்டவை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மலையாள மாத தொடக்கமான விஷு பண்டிகை துபாயில் இன்று உற்சாகமாக கொண்டாடப்பட்டது.

மத்திய கிழக்கு நாடுகளின் சார்பில் உலக மலையாள கவுன்சில் சார்பில் நடைபெற்ற இந்த கொண்டாட்டங்களின்போது, கேரள மக்கள் பாரம்பரியமாக பரிமாறிக்கொள்ளும் விஷு கை நீட்டம் நிகழ்வில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

<<<<>>>>>

பப்புவா நியூகினியாக நாட்டின் வடக்குப்பகுதியில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவுகோலில் ஆறு புள்ளி ஐந்தாக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நியூ பிரிட்டன் தீவின் கிழக்கு – தென்கிழக்கில் 110 கிலோமீட்டர் தொலைவில் கடலுக்கு அடியில் 64 கிலோமீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், இதனால் சுனாமி அச்சுறுத்தல் இல்லை என்றும் அந்த ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது.

<<<<>>>>>

அமலாக்கத்துறை வழக்கிலிருந்து தம்மை விடுவிக்கக் கோரி, முன்னாள் அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி தொடர்ந்த வழக்கில் சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் நாளை மறுநாள் உத்தரவு பிறப்பிக்கவுள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடை சட்டத்தின் கீழ், திரு. செந்தில்பாலாஜி, கடந்த ஆண்டு ஜூன் மாதம் 14ஆம் தேதி கைது செய்யப்பட்டார்.

<<<<>>>>>

இந்த ஆண்டு பருவமழை வழக்கத்தைவிட அதிகமாக இருக்கும் என்று புவி அறிவியல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய புவி அறிவியல் அமைச்சக செயலாளர் டாக்டர் எம் ரவிச்சந்திரன், இந்த ஆண்டு ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான காலக்கட்டத்தில், தென்மேற்கு பருவமழை 106 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

அதேநேரத்தில், வடகிழக்கு, கிழக்கு, வடமேற்கு மாநிலங்களில் உள்ள சில பகுதிகளில் வழக்கத்தைவிட மழை குறைவாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு - ஹைதராபாத் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

பெங்களூருவில் நடைபெறும் இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

-----------

கனடாவின் டோரான்டோவில் நடைபெற்றுவரும் **FIDE** செஸ் போட்டியில், இந்தியாவின் **Vidit Gujarathi** ஒன்பதாவது சுற்றில், அமெரிக்காவின் **Hikaru Nakamura** –வை தோற்கடித்தார்.

<<<<END>>>>>